யாழ்ப்பாணம்

# ★ அரசு தனது யோசனைகளைத் தெரிவித்தால் அதனைப் பரிசீலிக்க புலிகள் தயார் - குவாக்கர்ஸிடம் புலிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

''இனப்பிரச்சனை தீர்வு தொடர்பாக சிறிலங்கா அரசு தனது நிலைப்பாட்டை எமக்குத் தெரிவித்தால் நாம் அதனை பரிசீலனை செய்யமுடியும்'' என்று விடுதலைப்புலிகள் குவாக்கர்ஸ் சமாதானக் குழுவினரிடம் தெரிவித்துள்

[4ம் பக்கம் பார்க்க]

விலை பா 5 00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 25 இதழ் 273

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 10 — 11 — 1992

## அரசியல் கட்சிகளையும் 'குவாக்கர்ஸ்' சந்தித்தது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள 'குவாக்கர்ஸ்' சமாதானக்குழுவினர் யாழ். வருவதற்கு முன்பு கொழும்பில் பல அரசியற்கட்சித்தலைவர்களையும் அதிகாரிகளையும்

(4-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு-கிழக்கு இணைப்புக்கு 'ரெலோ' எதிர்ப்பு!

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பை நிராகரித்து, அதனைப் பிரிக்கும் யோசனையை, 'ரெலோ' அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

# ● மட்டக்களப்பு போர் முனையில் 'ஹெலி' வீழ்ந்து நொருங்கியது!

# அதிகாரி பலி; விமானிகள் காயம்

## புலிகள் மீதும் சந்தேகம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு 'உகன' விமானப் படை முகாமுக்கு அருகில் யுத்த ஹெலிகொப்டர் ஒன்று நேற்று மாலை வீழ்ந்து நொருங்கியதில் ஒரு உயர் அதிகாரி ஸ்தலத்தில் பலியானதுடன், விமான ஓட்டிகள் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர். யுத்தமுனையில் இச்சம்பவம் இடம்பெற்றதால், இதற்கான காரணம் தெரியவில்லை எனக் கூறப்படுகின்றது.

மட்டக்களப்பில் காடுகளில் படையினர் மேற்கொள்ளும் இராணுவ நடவடிக்கைக்கு உதவியாக இந்த ஹெலிகொப்டர் கண்காணிப்பு வேலையில் ஈடுபட்டதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹெலிகொப்டர் வீழ்ந்து நொருங்கிய இடத்திற்கு உடனடியாக விரைந்த அதிகாரிகள் இச்சம்பவத்திற்கான காரணம் என்ன என்பதை உடனடியாக கூறமறுத்துவிட்டனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## விமானப்படைத் தளபதி மட்டுநகர் விரைவு

(கொழும்பு)

மட்டக்களப்பில் ஹெலிகொப்டர் வீழ்ந்து நொருங்கியதையடுத்து விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் ரெறன்ஸ் குணவர்த்தன மட்டக்களப்புக்கு விரைந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து உடனடியாக விசாரணைகளை ஆரம்பி குமாறும் அவர் அதிகாரி

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ 'ஒபரேஷன் ஜெயபாகர' மட்டக்களப்பு காடுகளில் அகோர விமானத் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் ஆரம்பமான 'ஒபரேஷன் ஜெயபாகர' யுத்த நடவடிக்கை முப்படைகளின் உதவியுடன் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவருவதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

குறிப்பாக காட்டுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுள்ள இத்தாக்குதலின் நோக்கம், 'மழைகாலப் பகுதிக்குமுன் காடுகளிலிருந்து புலிகளை வெளியேற்றுவதே' எனவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

ரெலோவும் மற்றும் ஒரு தமிழ் இயக்கமும் படையினருக்கு உதவிவருவதாகவும் இந்த யுத்த நடவடிக்கைக்கு கிழக்கு பிராந்திய தளபதி பிரி

(4-ம் பக்கம் பார்க்க)

## கமாண்டோ படையணி கிழக்கே விரைவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்திற்கு மேலதிகமாக பெருமளவு அதிரடிப்படையினர் அனுப்பப்பட்டு வருவதாக கூட்டுப் படைத்தலைமையகம் அறிவித்துள்ளது.

இராணுவ பயிற்சி பெற்ற கமாண்டோ பொலிசில் பிரி

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதத் தடை முற்றாக நீக்கப்படவில்லை

(லண்டன்)

இலங்கைக்கான ஆயுத விற்பனைத் தடையை பிரிட்டன் முற்றாக நீக்கமாட்டாதென அறிவித்துள்ளது.

(4ம் பக்கம் பார்க்க)

## 33 பேருக்கு யாழ்ப்பாணத்தில் நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இருந்து வவுனியாவில் நடைபெற்ற ஆரம்ப ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றுதவர்களுக்கு நாளை மறுதினம் 12-ம் திகதி யாழ். கல்வித்திணைக்களத்தில் நேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

இவ்வாறு யாழ். கல்விப் பணிப்பாளர் இ.சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

[2ம் பக்கம் பார்க்க]

## விமானங்கள், பீரங்கி வண்டிகளை பிரிட்டன் இலங்கைக்கு வழங்கும்

(லண்டன்)

யுத்த விமானங்கள், பீரங்கி வண்டிகள் மற்றும் உதிரிப்பாகங்களை இலங்கைக்கு விற்பனை செய்ய பிரிட்டிஷ் அரசு முடிவு செய்துள்ளது.

இலங்கையில் வடக்கு கிழக்கில் யுத்தம் தொடர்ந்து நடைபெறுவதால் இலங்கைக்கு இராணுவ தளபாடங்களை மீண்டும் விற்பனை

(4ம் பக்கம் பார்க்க)

**வீட்டிற்கு வீடு மரம் நாட்டினால் நாட்டுக்கு மழைநீர் நாளுமுண்டு**

## ★ அவசரகால சட்டத்தை நீக்கக்கோரி 13 எதிர்க்கட்சிகள் ஒருமித்து கொழும்பில் நாளை பேரணி

(கொழும்பு)

அவசரகால சட்ட விதிகளை நீக்கக் கோரி 13 எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நாளை பெரும் பேரணி ஒன்றை கொழும்பில் நடாத்தவுள்ளன. எதிர்க்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெறவுள்ள பேரணியிலும், கொழும்பு டி மெல் பார்க்கில் அவரது

(2-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நோவு வைத்தியம்

ஒட்டகப்புலம் சமத்தர் நோவு எண்ணெய் கிடைக்குமிடம் எஸ் ரி. மெடிக்கல்ஸ். 490, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6888)

### அனுமதி பரீட்சை (ஆண்டு 6)

பிரபல பாடசாலைகளுக்கான ஆண்டு 6 மாதிரிப் அனுமதி பரீட்சை 10-11-92 செவ்வாய் பி. ப. 3-00 நடைபெறும். பரீட்சைக்குத் தோற்ற முடியாதவர்கள் வினாத்தாள்களைப் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம் 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி-2574)

## நூல் அறிமுக விழா

(கொழும்புத்துறை)

நடன கலை ஆலோசகர் திருமதி யசோதரா விவேகானந்தன் எழுதிய (அழகியற் கலை) பரதநாட்டியம் என்ற நூலின் அறிமுகவிழா ஒன்றை சாவகச்சேரி மகளிர் மகா வித்தியாலயம் இம்மாதம் நடுப்பகுதியில் நடாத்தப் படவுள்ளது. (154)

## இன்று

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி சைவ மகாவித்தியாலய தாபகர் தினமும் பரிசளிப்பு விழாவும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பரிசளிப்புப் பேருரையை யாழ். பிரதேசக்கல்விப்பணிப் பாளர்இரா சுந்தரலிங்கமும், சிறப்புரையை மருதனாமடம் பிரதிக்கல்விப் பணிப்பாளர் இ. சிவானந்தமும் தாபகர் உரையை நம. சிவப்பிரகாசமும், கருத்துரையை உதவி அரசாங்க அதிபர் செல்வி த. தணிகாசலமும் கொத்தணி அதிபர் பி. விக்னேஸ்வரனும் வழங்குவார்கள். (சு)

## இராசி பலன்

**10-11-1992**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு ஐப்பசி 25)**

பூரணை பி. ப. 3-45 வரை பரணி மு. இ. 8-06 வரை சித்தயோகம். இராகுகாலம் பி. ப. 3-06 முதல் 4-36 வரை சுபநேரம் காலை 10-36 முதல் 12-06 வரை பூரணை விரதம்

மேடம்: பந்து வருகை. மேலதிகாரிகளின் ஆதரவு, பணவரவு.

இடபம்: காரிய தாமதம், வீண் அலைச்சல் யோசனை.

மிதுனம்: தூரச்செய்திகள், தெய்வ வழிபாடு, கடின உழைப்பு.

கடகம்: நண்பர்கள் ஆதரவு தொழில் சிறப்பு. பாராட்டு.

சிங்கம்: சிறுநஸ்டங்கள், கௌரவ குறைவு, மனஸ்தாபம்.

கன்னி: உறவினர் விரோதம், வீண்வம்பு, இடையூறு.

துலாம்: கலைத்துறை ஈடுபாடு சுபகாரிய நிகழ்ச்சி. மதிப்பு.

விருச்சிகம்: குடும்பசுகம், நண்பர் சகாயம், தன ஆதாயம்.

தனுசு: நிம்மதி குறைவு. வேலைப்பளு. குடும்ப இன்னல்

மகரம்: வாக்குப்பகை. பயணத்தடை. குடும்ப பிரிவு.

கும்பம்: தேகதாபம், முயற்சி வெற்றி. வஸ்திரலாபம்.

மீனம்; தொழில் விரயம், ஏமாற்றம், மனைவியால் செலவு. இடமாற்றம்.

— ஜோஸப்பர்

---

### 33 பேருக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த 1ம் திகதி வவுனியாவுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களில் 33 பேர் போக்குவரத்து மற்றும் கஷ்டங்களினால் சமூகம் கொடுக்கவில்லை இந்த நிலையை திருகோணமலையில் உள்ள மாகாண கல்வி அமைச்சுக்கு சுட்டிக்காட்டிய போதே மேற்படிபரீட்சையை யாழ்ப்பாணத்தில் வைப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது

அபேட்சகர்கள் தமது நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்த கடிதத்துடனும், கேட்கப்பட்ட ஆவணங்களோடு இம்மாதம் 12ம் திகதி காலை 9 மணிக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

நேர்முகப்பரீட்சையில் திருகோணமலை கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் கலந்து கொள்வார் என்று யாழ். கல்விப்பணிப்பாளர் மேலும்தெரிவித்தார். (சு)

### அவசரகால சட்டத்தை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையில் மாலையில் நடைபெறவுள்ள கண்டனப் பொதுக்கூட்டத்திலும் 13 கட்சிகளையும் சேர்ந்த தலைவர்கள் பலர் கலந்துகொள்வர்.

இதுபற்றி திரு லலித் அத்துலத்முதலி தெரிவிக்கையில்; வடக்கு - கிழக்கு யுத்தத்திற்கென கொண்டு வரப்பட்ட அவசரகால சட்டவிதிகளை அரசு துஷ்பிரயோகம் செய்து பொதுமக்களின் ஜனநாயக, தொழிற்சங்க உரிமைகளை டாறிப்பதாகவும். ஆகையால் அவசரகால சட்டத்தை வாபஸ்பெற வேண்டுமெனவும் இப்போராட்டம் நடைபெறவுள்ளதாக குறிப்பிட்டார். (இ)

## வாழ்க்கை சுமைகளிலிருந்து நிவாரணம் வழங்கவே ஊழியருக்கு சம்பளஉயர்வு

### - பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

அதிகரித்துவரும் வாழ்க்கைச்செலவு சுமைகளிலிருந்து அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கமாகவே புதிய வரவு—செலவுத் திட்டத்தில் அவர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கப்பட்டுள்ளதாக பிரதமர் டி. பி. விஜயதுங்கா பத்தேகமவில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் வடக்கு—கிழக்கு யுத்தத்திற்காக அரசு பெருமளவு பணம் செலவிடவேண்டிய நிலையிலும்கூட அரசு அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு வழங்கியுள்ளதாகவும் குறிப்பிட்டார். (க)

## பகவான் சாயிபாபாவின் அவதார தினவிழா

(மானிப்பாய்)

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவின் அவதார தினவிழா இம்மாதம் 22ந் திகதி திங்கள் காலை 6-30 மணிக்கு தாவடி விநாயகர் ஆலயத்திற்கு முன் அமைந்துள்ள மேற்படி சேவா நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (71)

## அங்குரார்ப்பண கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச்சங்க அங்குரார்ப்பணக்கூட்டமும் ஆண்டுப் பொதுக்கூட்டமும் கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தில் 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் உத்தியோகத்தர் தெரிவும் செயற்குழு உறுப்பினர் தெரிவும் இடம்பெறவுள்ளது. (க)

## மோட்டார் சைக்கிள் திருட்டு

(கொழும்புத்துறை)

நவாலி தெற்கு திருமதி தம்பிநாயகம் அரியேற் வீட்டில் கடந்த புதன்கிழமை இரவு கருச்சில் பாதுகாப்பாகப் பூட்டிவைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்றும், புத்தம்புதிய ஏசியா சைக்கிள் ஒன்றும் திருடப்பட்டுள்ளன.

இத்திருட்டுச் சம்பந்தமாக தமிழீழ காவல்துறையில் புகார் செய்யப்பட்டுள்ளது. (152)

0 0

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பிப்பிலி மயானத்திற்கு சமீபமாகவுள்ள அகதிகள் முகாம் ஒன்றில் இரவு வேளையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சுமார் 4000 ரூபா பெறுமதியான சைக்கிள் ஒன்று திருட்டுப் போயுள்ளது. (72)

## ஆங்கில கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பாடசாலைகளில் ஆங்கில மொழிப் போதனை எனும் தலைப்பில் கருத்தரங்கு ஒன்று, யாழ் பல்கலைக்கழக ஆங்கில மன்ற ஆதரவில் நாளை புதன்கிழமை மாலை 3-0மணிக்கு புவியியல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. திருவாளர்கள் கே. கே. சோமசுந்தரம், சோ பத்மநாதன், து. தியாகராசா, எஸ். தெய்வசகாயாலன் ஆகிய கல்வியியலாளர்கள் உரையாற்றுவர்.

## குழாய்நீர் விநியோகம்

(உடுவில்)

நவாலி சென். பீற்றேஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் மூன்றுண்டு கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட குழாய்நீர் விநியோகத்தை யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

பாடசாலை அதிபர் திரு. சுகந்தன் தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது

மருதனாமடம் உதவி கல்விப் பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா, நவாலி கொத்தணி அதிபர் ஐ மனோகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். (109)

## மாணவர் உணவுமுத்திரை

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில கல்லூரியில் செயற்பட்டு வரும் மாதகல் சென். ஜோசவ் மகாவித்தியாலய மாணவர்களின் மதிய உணவு முத்திரைகள் கையிருப்பில் இருப்பதாகவும், இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கியிருக்கும் மாணவர்கள் இங்கு வந்து தங்களது மதிய உணவு முத்திரைகளை பெற்றுக்கொள்ளுமாறும் வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார். (72)

---

## நினைவஞ்சலிக் கூட்டம்

(ஆனைப்பந்தி)

ஐப்பசி மாதத்தில் வீரச்சாவடைந்த தீவகத்தைச் சேர்ந்த மாவீரர்களை நினைவு கூர்ந்து நினைவஞ்சலிக் கூட்டம் அண்மையில் யாழ் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தீவக மக்கள் தங்கியிருக்கும் அரியாலை சாம்சன், மணியரசன், டயஸ் வீடமைப்பு திட்டங்களின் பொறுப்பாளர் திரு. மயா. காவலன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் மகளிர் முன்னணியின் தீவக பொறுப்பாளர் செல்வி அன்பரசி, கலை பண்பாட்டுக்கழக துணைப்பொறுப்பாளர் திரு தேவர், தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் திரு. பொன் தியாகம் ஆகியோர் நினைவுரைகள் நிகழ்த்தினர்கள். (101)

## மக்கள் அஞ்சலி

(நெல்லியடி)

வளலாய்ப்பகுதியில் கடந்த 5-ம் திகதி இடம்பெற்ற சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரச்சாவு எய்திய 2ம் லெப் குகன் (சிதம்பரப்பிள்ளை இந்திரகுமார் - துன்னாலை வடக்கு) புகழுடம்பு இவரது இல்லத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்கு வைக்கப்பட்டது.

கரவெட்டி காசிநாதர் வித்தியாலயத்தில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் வடமராட்சி கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு பாஸ்கரன், வடமராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி, வடமராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு சு. அரசண்ணா ஆகியோரும் அஞ்சலியுரை நிகழ்த்தினார்கள். இதனைத் தொடர்ந்து இவரது புகழுடம்பு மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது. (160)

# செய்திச்சிதறல்

### ஒலிபெருக்கி அன்பளிப்பு

(நெல்லியடி)

அல்வாய் தெற்கு சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் ஆலயத்திற்கென அவ்வூர் இளைஞர்களினால் ரூபா பதினாயிரம் பெறுமதியான ஒலிபெருக்கி சாதனங்களை ஆலய நிர்வாகத்திடம் அன்பளிப்புச் செய்துள்ளனர். (160)

### பாடசாலையில் குழாய்க்கிணறு

(உடுவில்)

நவாலி சென் பீற்றேஸ் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் அதிபர் திரு சுகந்தன் தலைமையில் பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து சுமார் 16 000 ரூபா செலவில் குழாய்க்கிணறு ஒன்றை அமைத்துள்ளனர். (190)

### பதில் கிராமசேவையாளர்

(மானிப்பாய்)

கரம்பன் தென்கிழக்கு கிராமசேவகர் பிரிவிற்கு சு. பாலச்சந்திரன் பதில் கிராம சேவையாளராக தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். (71)

### மருந்து தட்டுப்பாடு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை (மந்திகை)யில் மருந்து வகைகளுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது (52)

### சைவ வினாவிடை அன்பளிப்பு

(கொழும்புத்துறை)

ஆண்டு எட்டிற்கான சைவ நெறி வினாவிடையினை சுமார் ஐம்பது பாடசாலை நூலகங்கட்கு சரசாலை இந்து இளைஞர் மன்றம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (154)

### மருந்து விநியோகம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபை இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலைக்கு 10, 000 ரூபா பெறுதியான மருந்து வகைகள் விநியோகிக்கப்பட்டுள்ளது. (52)

### விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

பருத்தித்துறை ஞானசம்பந்தர் கலைமன்ற பாலர் பாடசாலை விளையாட்டுப் போட்டி மன்ற மைதானத்தில் மன்றத்தலைவர் தலைமையில் நடைபெற்றது. இவ்விளையாட்டுப் போட்டியிலும் பரிசளிப்பு விழாவிலும் திரு. வி சேதுநாயகம் பிரதம விருந்தினராகக்கலந்து கொண்டார் (52)

### மரம் நாட்டு விழா

(நெல்லியடி)

கட்டைவேலி உடுப்பிட்டி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் மரம் நாட்டு விழா இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் 100 கு மேற்பட்ட பனம் விதைகள் சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாட்டப்பட்டன (160)

### நாவன்மைப் போட்டி

(பண்டத்தரிப்பு)

கீரிமலை சிவநெறிக்கழகம் நாவலர் குருபூசையை முன்னிட்டு நாவன்மைப்போட்டியொன்றை அடுத்த மாதம நடாத்துவதென்று தீர்மானித்துள்ளது.

நகுலை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இப்போட்டி நடைபெறவிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (72)

### வயிற்றோட்டம் அதிகரிப்பு

(கொக்குவில்)

கொக்குவில், கோண்டாவில், தாவடி பகுதிகளில் வயிற்றோட்டம் நோய் மிக வேகமாக பரவி வருகின்றது. பெரும்பாலும் சிறுவர்களையே இந்நோய் பாதித்துள்ளது. இதனால் இப்பகுதி வைத்திய நிலையங்களில் நோயாளர் தொகை அதிகரித்துள்ளது. (135)

### பற்பொடி உற்பத்தி

(ஆனைப்பந்தி)

நாவற்குழி லவனிதா குடியிருப்பில் இயங்கும் மாவீரர் நற்பணி மன்ற உற்பத்திக் குழுவினால் பற்பொடி உற்பத்தி செய்யப்படுகின்றது 'சப்த பற்பொடி' என்ற பெயரில் கடந்த மாதம் தொடக்கம் மேற்படி உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. (101)

### ஆண்களுக்கு தையல் பயிற்சி

(புலோலி)

கரவெட்டிப்பிரிவு செஞ்சிலுவைச்சங்கம் ஆண்களுக்கான தையல் பயிற்சி வகுப்பு ஒன்றினை விரைவில் ஆரம்பிக்கவுள்ளது.

இத்தையல் பயிற்சியைப் பெற விரும்பும் ஆண்கள் நெல்லியடியிலுள்ள கரவெட்டிப்பிரிவு செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் விண்ணப் பங்களை ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (61)

# திருமலையில் கைதாகும் தமிழ் இளைஞர் யுவதிகள் காணாமல்போவது வழமையான சம்பவமாகும்

## - அழிந்த நிலையில் கோணேஸ்வரர் ஆலயம் -

இயற்கைத் துறைமுகமும், இயற்கை அழகும், பாடல்பெற்ற தலமும் உள்ள திருகோணமலை இன்று பரிதாபமானமுறையில் காட்சியளிக்கின்றது

திருகோணமலை மாவட்டத்திலுள்ள தமிழர்கிராமங்கள் அனைத்திலும் இன்று துரிதமான சிங்களக்குடியேற்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது,

திருமணம் செய்யாத தமிழ் இளைஞர், யுவதிகள் இன்று திருமலையில் வசிக்கமுடியாது. அப்படி யாரும் வசித்தால் அவர்களை முஸ்லிம் ஊர்காவல் படையினரும், இராணுவத்தினரும் கைதுசெய்து கொண்டுபோய் என்ன செய்கின்றார்கள் என்று தெரியாத நிலைமை இப்பகுதி தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது இதனால் இப்பகுதியில் இளைஞர், யுவதிகள் ஒருவருமே இல்லை என்றளவுக்கு சிறுவயதிலேயே எல்லோரும் திருமணம் செய்துகொள்கின்றனர். இந்தக்கிராமத்திலேயே பெரும்தொகையான இந்துசமயத்தவர்கள் முஸ்லிம்களாக கட்டாயப்படுத்தப்பட்டு மதமாற்றம் செய்யப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது

**திருகோணமலை நகரம்**

திருகோணமலை நகரத்துக்குள் பிரவேசிக்கும் எல்லாப் பாதைகளிலும் பொலிசாரின் சோதனை முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. பொலிசாரின் தீவிரமான சோதனைக்குப்பின்பே யார் என்றாலும் நகர எல்லைக்குள் பிரவேசிக்கமுடியும். யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சோதனைகள் மிகக் கடுமையாக இருப்பதுடன் சரியான ஆதாரங்கள் இருந்தால் மட்டுமே நகரத்துக்குள் பிரவேசிக்க முடியும்.

புகையிரத நிலையம், பஸ் நிலையம் போன்ற முக்கிய இடங்களில் எல்லாம் ஆயுதம் தரித்த பொலிசார் இரவு பகலாக நிறுத்தப்பட்டிருப்பதுடன் இராணுவத்தினரின் ரோந்தும் அடிக்கடி இடம் பெறும்.

நகர எல்லைக்குள் கூடுதலாக தமிழ் மக்களே வசிக்கின்றார்கள் நகர எல்லைக்குள் உள்ள தமிழ் மக்களின் பல வியாபாரத் தலங்களும், வீடுகளும், சிங்களவர்களினாலும், முஸ்லிம்களினாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. நகர எல்லைக்குள் தமிழ்மக்கள் கூடுதலாக வாழ்ந்தாலும் இவர்களும் ஒருவித அச்சஉணர்வுடனேயே வாழ்ந்து வருவதைக் காணக்கூடியதாகவுளது.

திருகோணமலை மாவட்டத்தில் உள்ள எந்த ஒரு இடத்திலும் ஒரு அசம்பாவிதம் நடைபெற்றால் நகர எல்லைக்குள் வசிக்கின்ற அத்தனை தமிழ் மக்களும் அடுத்தநாள் அதிகாலை ஒலிபெருக்கி மூலம் இராணுவத்தினரால் முற்றவெளி மைதானத்துக்கு அழைக்கப்படுகின்றனர்.

காலை 6 மணியிலிருந்து மாலை 3 மணிவரை கால்கடுக்க உணவு எதுவுமின்றி முற்றவெளி மைதானத்தில் கூடி நின்ற தமிழ் மக்கள் அனைவரும் இராணுவத்தினரின் தீவிர விசாரணைக்குட்படுத்தப்படுகிறார்கள்

இச்சம்பவம் அடிக்கடி நடைபெறும். இந்த 'ரவுண்ட் அப்' பின்போது இராணுவத்தினரால் கைதுசெய்யப்படும் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் காணாமல்போவது சர்வசாதாரணமாக உள்ளதுடன் எத்தனையோ தாய் தந்தையர்கள் இன்று தமது பிள்ளைகளை இழந்து பரிதவிக்கின்றனர்.

இராணுவத்தினரால் பாதை காட்ட என அழைத்துச் சென்ற பல நடைபாதை வியாபாரிகள் இன்று எங்கே இருக்கின்றார்கள் இவர்களுக்கு என்ன நடந்தது என்றுகூட தெரியாமல் இவர்களின் குடும்பத்தினர் ஏங்கித் தவித்த வண்ணம் உள்ளனர்

நகர எல்லைக்குள்கூட இன்னும் இடிந்த கட்டிடங்களும், வீடுகளும் எரிந்த கொட்டில்களும் காட்சியளிக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்திலும் நகர எல்லைக்குள்ளும் பல பிரசித்தி பெற்ற ஆலயங்கள் இன்று எரிந்த நிலையிலும் இடிந்த நிலையிலும் காட்சியளிக்கின்றன. நகர எல்லைக்குள் இருக்கின்ற ஆலயங்கள் கூட இன்னும் திருத்தியமைக்கப்படாமல் இருப்பது வேதனைக்குரிய விடயம் ஆகும்.

நகர எல்லைக்குள் இருக்கும் அனைவரும் இராணுவத்தினரால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டைகளை வைத்திருக்க வேண்டும். இந்த விசேட அடையாள அட்டைகள் இன்றி எவரும் இங்கு வசிக்க முடியாது ஒவ்வொரு குடும்பத்தினரும் தமது வீட்டில் வசிக்கின்ற குடும்ப அங்கத்தவர்களின் பெயர், விபரம் அடங்கிய பட்டியலை வீட்டின் முகப்பில் தொங்கவிட வேண்டும். குடும்ப விபரம் அடங்கிய பட்டியலில் உள்ளவர்களைத் தவிர்ந்த ஏனைய ஒருவரும் அந்த வீட்டில் தங்கவோ இருக்கவோ முடியாது. அப்படி ஒருவர் தங்கவேண்டும் என்றால் முன்கூட்டியே இராணுவத்தினரின் அனுமதி பெற்றே வீட்டில் தங்கவேண்டும் இரவு நேரங்களில் இப்பகுதி மயான அமைதி போலவே காட்சியளிக்கின்றது.

**கோணேசர் ஆலயம்**

இலங்கையிலுள்ள பாடல் பெற்ற தலங்களுள் மிகப் பிரசித்தி பெற்றதும் பழமை வாய்ந்ததும் திருகோணமலையில் எழுந்தருளியுள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயம் ஆகும். இன்று இந்தப் பாடல்பெற்ற திருத்தலம் சிங்களக் காடையர்களின் தாக்குதலுக்குள்ளாகி ஒருபகுதி எரிந்த நிலையில் இராணுவத்தினரின் முற்றுகைக்குள்ளாகியிருக்கின்றது ஆலயத்தின் முன்பகுதி தீ மூட்டி எரிக்கப்பட்டுள்ளது. ஆலயத்தின் விலை மதிக்கமுடியாத தளபாடங்களும் விக்கிரகங்களும் சேதமடைந்துள்ளன. ஆலயத்தின் பிரதமகுரு வசித்த இல்லம் சேதமாக்கப்பட்டுள்ளது. ஆலயத்தைச் சுற்றிலும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். ஆலய எல்லைக்குள் இராணுவத்தினரின் பல முகாம்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நாள் ஒன்றுக்கு ஐந்துகாலப் பூசைகள் நடைபெற்ற ஆலயத்தில் இன்று ஒருகாலப் பூசைகூட நடைபெறுவதில்லை. பலமாதங்களாக பூட்டிக் கிடந்த ஆலயம் சென்ற சில மாதங்களுக்கு முன்பு தான் திறக்கப்பட்டது. ஆலயத்தைத் திறந்தும் எம்பெருமானுக்கு பூசைகள் எதுவும் நடைபெறுவது இல்லை.

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் முயற்சியினால் ஒவ்வொரு நாளும் காலை 6—30 மணிக்கு மட்டும் ஜீப்வண்டியில் ஆலயத்தின் திறப்புக் கோர்வைகளை வைத்திருக்கும் சட்டத்தரணி ஒருவரும் ஆலய பிரதமகுருவும் ஆலயத்தை துப்பரவு செய்வதற்கு தொழிலாளி ஒருவரும் மூன்று அல்லது நான்கு பொதுமக்களும் ஆலயத்துக்கு செல்வார்கள். இராணுவத்தினரின் அனுமதிக்குப்பின்பு ஆலயத்தினுள்ளே பிரவேசிக்க முடியும் கோணேசருக்கு பூசைகள் எதுவும் நடைபெறமாட்டாது. விளக்குகள் மட்டும் ஏற்றப்படும் இதேபோல ஆலயத்தினுள்ளே இருக்கும் சகல தெய்வங்களுக்கும் விளக்குகள் மட்டுமே ஏற்றிவைக்கப்பட்டு பின்பு கற்பாறைகளின் மீதுள்ள மரத்திற்கும் கோணேசர் அமர்ந்திருந்த இடம் எனக் கருதப்படும் இடத்துக்கும் பிரதமகுருவினால் அபிஷேக ஆராதனைகள் மேற்கொள்ளப்படும்.

ஆலயத்தினுள்ளே ஜீப் வண்டியைத் தவிர வேறு எந்த நேரத்திலும் எவரும் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். பொதுமக்கள் விசேட தினங்களிலும் வெள்ளி செவ்வாய் போன்ற நாட்களிலும் முற்றவெளி மைதானத்திலிருந்த கோணேசரை தரிசிக்கும் துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

ஆலய வளவிற்குள் இராணுவத்தினரின் பல பாதுகாப்பு அரண்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

கோணேசருக்கு ஐந்துகால பூசை எப்போது நடைபெறும். எப்போது நாம் எல்லாம் சென்று தரிசிக்கப்போகின்றோமோ என்று இப்பகுதி மக்கள் ஏங்கித் தவித்த வண்ணம் உள்ளனர். [137]

---

## போரில் இறந்த படையினருக்கு தற்கொலை மரண சான்றிதழ்

### படையினர் விசனம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் புலிகளுடனான யுத்தத்தில் உயிரிழந்த படையினர் பலரது மரண அத்தாட்சிப் பத்திரத்தில் தற்கொலையே மரணத்திற்கு காரணமென குறிப்பிட்டுள்ளதாம்.

இதனால் படையினர் மத்தியில் பெரும் விசனம் ஏற்பட்டுள்ளது. இதுபற்றி பாதுகாப்பு அமைச்சின் கவனத்திற்கும் கொண்டுவரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை யுத்தத்தில் உயிரிழந்த படையினரின் குடும்பங்கள் கவனிப்பு எதுவுமின்றி இருப்பதாகவும் நஷ்டஈடு கிடைப்பதில் பெரும் தாமதம் ஏற்பட்டுவருவதாகவும் உயிரிழந்த படையினரின் பிள்ளைகள் பாடசாலைகளில் புறக்கணிக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. (சி)

---

## சிறுதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்ள உத்தரவு

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுதானிய பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதை ஊக்குவிக்குமுகமாக யூ. எஸ். உதவி நிறுவனம் விவசாயிகளுக்கு பல உதவிகளை வழங்கி வருகிறது.

இவர்களின் உதவியால் யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறுதானிய பயிர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள ஏழாயிரத்து ஐநூறு விவசாயிகள் வரை பயன்பெறவுள்ளனர்.

யூ எஸ் உதவி நிறுவனத்தினரின் புதிய உதவித்திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு தேவையான விதைகள், மண்ணெண்ணெய், உரவகைகள் வழங்கப்படவுள்ளன.

சென்ற வருடங்களில் சுமார் முப்பதாயிரம் யாழ்ப்பாண மாவட்ட சிறு தானிய பயிர் செய்கையாளர்களுக்கு பயிர்ச்செய்கையை ஊக்குவிக்குமுகமாக யூ எஸ். உதவி நிறுவனம் உதவிகள் வழங்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. [109]

---

## புனர்வாழ்வுபிரிவு செயலகமர்வு

(நெல்லியடி)

யாழ். புனர்வாழ்வுப் பிரிவின் செயலக அமர்வு இம்மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலர் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ளது.

மீளக்குடியமர்வுக்கு ரொக்கப் பணமும், காயமுற்றோருக்கு காசோலையும் உரியவர்களுக்கு நேரில் கையளிக்கப்பட்டன. (160)

---

## ரஷ்ய அதிபருக்கு எதிராக மாஸ்கோவில் ஆர்ப்பாட்டம்

(மொஸ்கோ)

ரஷ்யாவில் போல்சிங் புரட்சியின் 75-வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் மொஸ்கோவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியில் கலந்து கொண்ட ஆயிரக் கணக்கான மக்கள் அதை அதிபர் யெல்சினின் கொள்கைகளுக்கு எதிர்ப்புத்தெரிவிக்கும் ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக்கொண்டனர்-

நகரத்தின் அக்டோபர் சதுக்கத்திலுள்ள லெனின் சிலையைச் சுற்றிலும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவு தெரிவிக்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குழுமி தற்போதைய அரசு பதவி விலகவேண்டும் என்று கூறினார்கள்.

முன்பிருந்ததைவிட ஆர்ப்பாட்டக்காரர்களின் எண்ணிக்கை இம்முறை அதிகமாகவே இருந்ததாக தகவல்கள் கூறுகின்றன. எனினும் வரலாற்று சிறப்புமிகக் செஞ்சதுக்கத்தில் இந்த விழாவை முன்னிட்டு எந்தஒரு அரச நிகழ்ச்சியும் இடம்பெறவில்லை

தமது அரசை அகற்றுவதற்காக எதிர்ப்புப்படைகள் அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ரஷ்ய காங்கிரஸ் கூட்டத்தொடரை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடுமென்று அதிபர் யெல்சின் எச்சரித்திருப்பது நினைவிருக்கலாம்.

---

## 8 பேர் பலி

(புதுடில்லி)

உத்தரப் பிரதேசத்தில் பயணிகள் ரயில் ஒன்றுடன் மின்சார ரயில் மோதிக்கொண்டதில் 8 பேர் ஸ்தலத்தில் பலியானார்கள் 10 பேர் படுகாயங்களுக்குள்ளானார்கள்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது (க)

---

## பரிசளிப்பு விழா

[திருநெல்வேலி]

யாழ். செங்குந்த இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை 11ம் தேதி புதன் கிழமை காலை கல்லூரி அதிபர் மு. பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற உள்ளது. [156]

---

## யுத்தத்தைதொடரமுனைந்தால் பல தளபதிகளை அரசு இழக்கும்

### தீர்வுக்கும் வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரச்னைக்கு அரசியல் தீர்வு காணப்படாது யுத்தத்தைத் தொடர அரசு முனைந்தால் டென்சில் கொப்பேகடுவ போன்ற பல படைத் தளபதிகளை அரசு இழக்கவேண்டிய நிலை ஏற்படுமென எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் நாடாளுமன்றில் எச்சரித்துள்ளார்

வீண் அழிவுகளை ஏற்படுத்தும் இந்த யுத்தத்தை முடிவிற்குக் கொண்டுவந்து அரசியல் தீர்வை காண அரசு முயலவேண்டும். தவறின் திறமை வாய்ந்த பல தளபதிகளை பறி கொடுக்கும் நிலை ஏற்படும்.

இந்த யுத்தத்தால் வெற்றி பெற முடியுமென நினைப்பது வீண் முயற்சி. மனித உயிர்கள் பெருமளவில் அழிந்துகொண்டிருக்கிறது. தமது சுயலாபங்களுக்காக யுத்தத்தை நடத்த முனையாமல் அரசியல் தீர்வு காணவேண்டுமெனவும் கூறியுள்ளார். (சி)

★ அநுராதபுரம் முகாமில்

## எண்ணை லொறிகள் தடுத்துவைப்பால்

# மாதம் 10,000 ரூபா செலவு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கு லொறிகள் மூல கொண்டு செல்லப்படும் மண்ணெண்ணைகளை இராணுவத்தினர் அநுராதபுரத்தில தடுத்து வைப்பதினுல் லொறிகள் தடுத்து வைக்கப்படுவ இ-த்துக்குரிய உரிமையாளர்களுக்கு மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாவுக்கு மேல் வாடகைப் பணமாக செலுத்தி வருகின்றோம்.

இவ்வாறு கொழும்பில் நடைபெற்ற உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் யாழ் அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

கூட்டுப்படை தலைமையகத்தின் அனுமதியுடன் யாழ். நகருக்கு லொறிகள் மூலம் கொண்டு செல்லப்படும் மண்ணெண்ணைகளை அநுராதபுரத்தில் இராணுவத்தினர் தடுத்து வைக்கின்றார்கள்.

லொறிகளை வடக்கே அனுப்ப உடனடி நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளிடம் யாழ் அரச அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வி)

★ திருமலை — பருத்தித்துறை

## கப்பல்சேவை பற்றி

### தீர்க்கமான முடிவு இல்லை

(திருநெல்வேலி)

பருத்தித்துறைக்கும், திருகோணமலைக்கும் இடையே யான கப்பல் சேவையை நடத்துவது குறித்து இன்னமும் தீர்க்கமான முடிவு மேற்கொள்ளப்படவில்லை.

இச்சேவையை நடத்துவதற்கான அனுமதியை அரசு அளித்துள்ளபோதும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் இதனைப் பொறுப்பேற்க மறுத்து வருகின்றனர். யாழ். செயலகமும் இச்சேவையைப் பொறுப்பேற்பதில் பின்நிற்கிறது.

இக்கப்பல் போக்குவரத்துச் சேவையை நடத்துவதற்கு இன்னமும் முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (157)

## தபால் பொதிகளுடன் 'குமண' புறப்பட்டது

(புலோலி)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருட்களை இறக்கிய 'குமண' கப்பல் 270 தபால் பொதிகளையும் ஏற்றிக் கொண்டு நேற்று மாலை கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

தபால் பொதிகளுடன் லண்டன் விம்பிள்டன் கணபதி ஆலயத்துக்கான யாழ்ப்பாண மணவறையும் இக்கப்பலில் செல்கிறது.

இதேவேளை திருகோணமலையிலிருந்து மாவினை ஏற்றிக் கொண்டு குமாரிகப்பல் இன்று அல்லது நாளை இங்கு வந்து சேருமென எதிர்பார்க்கப்படுகிறது. (61)

★ 5 பாடங்களில் சித்தி பெற்றோர்

## ஆஸி. புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்கலாம்

(திருநெல்வேலி)

அவுஸ்திரேலியா பல்கலைக் கழகத்தில் சேர்ந்து கல்வி பயிலுவதற்கு குறைந்த பட்சம் 5 திறமைச் சித்தியினை க. பொ. த. (சாதாரண) தரத்தில் பெற்றவர்கள் விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதற்கான மேலதிக விபரங்கள் எதுவுமே தெரியாமல் பெரும்பாலான மாணவர்கள் யாழ். செயலகத்துடன் தொடர்புகொண்டு விபரத்தைப் பெற்றுத் தருமாறு கேட்டுள்ளனர்.

இவ்விபரங்களைப் பற்றி அறிந்து, அவற்றை அனுப்புமாறு கொழும்பில் உள்ள யாழ் அரச அதிபருக்கு யாழ். செயலகத்தால் செய்தி அனுப்பப்பட்டுள்ளது. (157)

### ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு நேற்று மாலை 7-00 மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்தது. (சி-சு)

## மின்னல் தாக்கி நால்வர் கருகிப்பலி

(கொழும்பு)

புத்தளத்தில் மின்னல் தாக்கியதில் சிறுவர் ஒருவர் உட்பட நால்வர் ஸ்தலத்தில் பலியாகினர்.

குடியேற்றத் திட்டப் பகுதியில் தேக்குமரக் கன்றுகளை நாட்டிக் கொண்டிருக்கையில் மின்னல் தாக்கியதில், மாணவர் ஒருவர் உட்பட நால்வரும் அந்த இடத்திலேயே உடல் கருகிப் பலியானதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### புதிய 20 ரூபா நோட்டு

(கொழும்பு)

புதிய 20 ரூபா தாள் இன்று 10ம திகதி முதல் புழக்கத்திற்கு வருவதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

பழைய 20 ரூபா தாளைப் போல் அல்லாது இது புதிய வடிவமைப்பைக் கொண்டிருக்கும் என்றும் மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது. (க)

### வடக்கு-கிழக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை-இந்திய உடன்படிக்கையின் நிபந்தனையின் கீழ், தற்காலிகமாக ஒருங்கிணைக்கப்பட்ட இரண்டு மாகாணங்களையும் பிரித்து விடுவதென அரசின் யோசனையை ஏற்றுத் தமது அமைப்பு தயாராக இருப்பதாக இக் குழுவின் பிரதிநிதி ஒருவர் 'கொழும்புப் பத்திரிகை' ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக்கொண்ட 'ரெலோ' இந்தியப்படையுடன் இணைந்து இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டதுத் தெரிந்ததே. (சி)

## விபத்தில் எண்மர் பலி

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டத்திலுள்ள ம்மொட என்ற இடத்தில ஏற்பட்ட விபத்தொன்றில் 8 பேர் பலியாகினர் என்றும் 30 பேர் காயமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

★ வடக்கு-கிழக்கில் படை நடவடிக்கையால்

## காணமல்போன அரச ஊழியர்களின் சம்பளம் வழங்க கோரிக்கை

(கொழும்பு)

இராணுவ நடவடிக்கைகளினுல் வடக்கு-கிழக்குப் பகுதிகளில் காணமற்போன அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை, அவரவர் குடும்பத்திற்கு வழங்கவேண்டும்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் வேண்டுகோள் விடுத்துள்ளார்

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் திரு. பி தயாரத்ன தலைமையில் கொழும்பில் கடந்த வாரம் நடைபெற்ற மாநாட்டில், யாழ். அரச அதிபர் மேற்கண்டவாறு கூறினுர்.

அவர் இது பற்றி மேலும் தெரிவிக்கையில், வடக்கு-கிழக்கில் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றிய பலர், இராணுவ நடவடிக்கைகளினுல் காணமற் போயுள்ளனர்.

இதனுல் அவர்களின் குடும்பங்கள் சம்பளம் ஏதுமின்றி கஷ்டப்படுகின்றுர்கள் காணமல்போன அரச ஊழியர்களின் சம்பளப் பணத்தை அவர்களின் குடும்பங்களுக்கு கிடைப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டும் என்றும் யாழ். அரச அதிபர் மேலும் கூறினுர். (வி)

## ஜனுதிபதி வவுனியா வருகிறுர்

(வவுனியா)

வவுனியாவில் இரண்டு ஆடைத் தொழிற்சாலைகளைத் திறந்துவைப்பதற்காக ஜனுதிபதி பிரேமதாசா இம்மாதம் 28ம் திகதி வவுனியா வரவுள்ளார்.

ஜனுதிபதியின் விஜயம் குறித்து, வவுனியா செயலகத்தில் உயர் மட்ட மாநாடு ஒன்று நடைபெற்றது. (சி)

### அரசு தனது யோசனைகளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளாக விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் ஒருவர் கூறினுர்.

கொழும்பிலிருந்து சமாதானப் பேச்சுக்களை நடத்துவதற்கென யாழ்ப்பாணம் வந்துள்ள மேற்படி குழுவினரிடம் புலிகள் மேலும் தெரிவித்துள்ளதாவது;

''விடுதலைப்புலிகள் எப்போதும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு குறுக்கே நிற்பது கிடையாது. நாங்கள் சமாதானத்தையே விரும்புகின்றேம்.

ஆனல் அரசாங்கமோ இராணுவ அழுத்தங்களையே எம்மீது தொடர்ந்து திணித்துக்கொண்டே வருகின்றதேயன்றி, சமாதானத்துக்கான எந்தவொரு வழிமுறைகளையும் கையாளுவதாகத்தெரியவில்லை''

இனப்பிரச்சனையை தீர்ப்பதற்காக அரசாங்கத்தால் தெரிவுசெய்யப்பட்ட நடாளுமன்றத் தலைவர் மங்கள முனசிங்கா தெரிவித்த திட்டத்தையே அரசாங்கததுடன் இணைந்து செயல்பட்டுவரும் தமிழ் குழுக்களே நிராகரித்துவிட்டார்கள்.

வடக்கு-கிழக்கில் ஒரு அமைதியை ஏற்படுத்த வேண்டும் என்று அரசு மனப்பூர்வமாக நினைத்தால் முதலில் தமிழ்மக்களுக்கு நம்பிக்கை ஊட்டும் செயல்களைச் செய்ய வேண்டும்.

இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு அதற்குரிய நிவாரணங்களை வழங்கவேண்டும், இராணுவம் கைப்பற்றிய இடங்களைவிட்டு அகன்று அங்கிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் குடியமர அனுமதிக்கவேண்டும், அத்தியாவசியப் பொருட்களின் தடைகளை நீக்கவேண்டும், போக்குவரத்துக்களை சீர் செய்யவேண்டும்

இவ்வாறுன சூழ்நிலைகளை உருவாக்கினுல் தான் அரசின் செயல்பாடுகளில் எமக்கு ஒரு நம்பிக்கை ஏற்பட்டு, பேச்சுவார்த்தைகளுக்கான ஒரு கட்டத்துக்கு நாமும் வருவோம் இவ்வாறு அப்பிரமுர் மேலும் தெரிவித்துள்ளார். (வி)

### கமாண்டோ

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வின் தொகுதிகளே கிழக்கிற்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்கில் இதுவரை ஆறு இராணுவ முகாம்களின் பொறுப்பை விஷேட அதிரடிப்படையினர் பொறுப்பேற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

### ஆயுதத் தடை

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

கண்டபடி சகட்டு மேனிக்கு பயன்படுத்த முடியாத ஆயுதங்களும், ஆயுதத் தளபாடங்களும் மட்டுமே முதலில விற்கப்படவுள்ளது.

எறிகுண்டுகள், பீரங்கிக் குண்டுகள், வெடிமருந்துகளை விற்க பிரிட்டன் மறுத்துள்ளது. மேலும் இலங்கையில் மனித உரிமைகள் விவகாரம் மிகவும் கவனமாக கண்காணிக்கப்பட்டு இலங்கைக்கு ஆயுதங்கள் தொடர்ந்து வழங்கப்படுவது மனித உரிமைகள் விவகாரத்திலேயே தங்கியிருக்குமென பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது.

இதேவேளை பிரிட்டனின் இம்முடிவையடுத்து வேறுபல நாடுகளும்இலங்கைக்கு ஆயுதங்களை விற்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (சி)

### மட்டக்களப்பு

(1ம் பக்கத் தொடர்சசி)

இச்சம்பவம் பற்றி அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டதாவது; அம்பாறையில் விமானப்படை முகாமிலிருந்து புறப்பட்ட இந்த ஹெலிகொப்டர் புறப்பட்ட சிறிது நேரத்தில் வீழ்ந்து நொருங்கியதாகவும் விமானப்படை அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதுடன் விமான ஓட்டி ஒருவரும் மற்றெருவரும் படுகாயமடைந்ததாகவும் இவர்கள் உடனடியாககொழும்புக்கு அனுப்பப்பட்டதாகவும் இந்த ஹெலிகொப்டர் அம்பாறையிலிருந்து மகா ஓயா சென்றதாகவும் குறிப்பிடப்பட்டது.

யுத்த முனையில்ஹெலிகொப்டர் வீழ்ந்து நொருங்கியதாக இதனை புலிகள் சுட்டு வீழ்த்தியிருக்கலாம்என்பதை மறுக்க முடியாதென பி. பி.ஸி. கூறியது (சி)

### விமானப்படை

(1-ம் பக்கத் தொடர்சசி)

களுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த சம்பவம் படையினருக்கு மீண்டும் ஒரு அடியாக இருப்பதாகவும கூறப்படுகிறது. (சு)

### அரசியல் கட்சிகளையும்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தித்துள்ளார்கள் என்று தெரியவருகிறது

ஏற்கனவே இருதடவை இக் குழுவினர் யாழ்ப்பாணம் வருகை தந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதறகிடையில் நேற்றும் இரண்டாவது நாளாக இக் குழுவினர் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தினுர் (சு சி)

### ஒபரேஷன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேடிடர் லக்கி அல்கமதலைமை தாங்குவதாகவும் இதனைத் தலை பிரிகேடியர் ஜானக பெரேரோ, பிரிகேடியர் மோகன் குணவர்த்தன ஆகியோர் வழி நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காட்டுப் பகுதிகளில் குண்டு வீச்சு விமானங்கள் தொடர்ந்தும் தாககுதலை நடாத்திவருகின்றன. (சி-சு)

### விமானங்கள்

(1ம் பக்கத் தொடர்சசி)

செய்வது அவசியமாகி விட்டதாக பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சு கூறியுள்ளது.

அண்மையில இலங்கைக்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் அமைச்சருக்கு இராணுவப்புலிகளுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டது; இதேவேளை இலங்கை படையினருக்கான பயிற்சியை பிரிட்டன் இடைநிறுத்தாது தொடர்ந்து வழங்கி வந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 10ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/I0336/8